ஆசிரியர்கள் மீது குற்றச்சாட்டு: பள்ளியை முற்றுகையிட்ட பெற்றோர்

இளம்பிள்ளை அருகே சரியான முறையில் பாடம் சொல்லித் தராத தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களை கண்டித்து அரசு பள்ளியை முற்றுகையிட்ட பெற்றோர்.

ஆட்டையாம்பட்டி, ஆக. 24: அரசுப் பள்ளி ஆசிரியர்களை கண்டித்து பள்ளியை பெற்றோர் முற்றுகையிட்டதால் திங்கள்கிழமை பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கல்பாரப்பட்டி கே. புதுப்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் 250-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளி ஆசிரியர்களில் இருவர் சரியான முறையில் பாடம் சொல்லித் தருவதில்லை என்று தலைமை ஆசிரியரிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. மேலும், பள்ளி கலைத் திருவிழாவில் மாணவ, மாணவிகள் வட்டார அளவில் முதன்மை பெற்று, மாவட்ட அளவில் விளையாட தகுதி பெற்றும், அவர்களுக்கு உரிய பரிந்துரை செய்யாமல் காலம்கடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இவற்றைக் கண்டித்து திங்கள்கிழமை 30-க்கும் மேற்பட்ட பெற்றோர், தங்களது குழந்தைகளின் பள்ளி மாற்றுச் சான்றிதழை கேட்டு பள்ளி முன் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் அறிந்த ஆட்டையாம்பட்டி காவல் துறையினர் விரைந்துவந்து அவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் இருவர் மீது பெற்றோர் தொடர்ந்து குற்றச்சாட்டு அளித்து வந்தது தெரிய வந்தது. மேலும், தாரமங்கலம் கல்வி மாவட்ட அலுவலர் வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இருவரை இடமாற்றம் செய்ய வேண்டும் என பெற்றோர் தரப்பில் கோரப்பட்டது. இதைத்தொடர்ந்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரி தெரிவித்ததையடுத்து பெற்றோர் கலைந்து சென்றனர்.

மக்கள் குறைதீர் கூட்டம்: மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 2.91 லட்சம் கடனுதவி

மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்

சேலம், ஆக.24: சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ. 2.91 லட்சம் கடனுதவியை மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ரவிக்குமார் வழங்கினார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது:

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், ஜாதிச் சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக் கடன், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி உள்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 503 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் அளிக்கப்பட்ட 24 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக கூறினார்.

இதைத் தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கான சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், தலா ரூ.25,000 வீதம் 7 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ. 1,75,000, ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ. 16,667, மற்றும் ஆவின் நிறுவன பால் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்ய ரூ. 50,000 வீதம் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,00,000 என மொத்தம் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 2,91,667 மதிப்பிலான கடனுதவியை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.

சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ரவிக்குமார்.

இதில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஜானகி, உதவி ஆணையர் (கலால்) எ.பாலசுந்தரம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அருளாளன், மாவட்ட வழங்கல் அலுவலர் கு.மோகனசுந்தரம், திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) சுகந்தி பரிமளம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவல்லி உள்ளிட்ட அரசுத் துறை முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் அரசு கலைக் கல்லூரியில் இலவச நுரையீரல் பரிசோதனை முகாம்

சேலம், ஆக. 24: சேலம் அரசு கலைக் கல்லூரியின் தேசிய நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் இலவச நுரையீரல் பரிசோதனை முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.

கல்லூரி வளாகத்தில் உள்ள திருவள்ளுவர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் (பொறுப்பு) பிரேமலதா தலைமை வகித்தார். கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கோமதி வரவேற்றார். ஆங்கிலத் துறைத் தலைவர் கங்காதரன் வாழ்த்தி பேசினார். 'நன்றாக சுவாசிப்போம்; சிறப்பாக வாழ்வோம்' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த சிறப்பு முகாமில், மாணவர்களின் நுரையீரல் செயல்பாட்டை பரிசோதிக்கும் வகையில் ஸ்பைரோமெட்ரி பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

சேலம் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற இலவச நுரையீரல் பரிசோதனை முகாமில் பங்கேற்ற மாணவி.

சிறப்பு விருந்தினர்களாக தனியார் சுவாச சிகிச்சை தொழில்நுட்ப வல்லுநர்கள் ஜீவன் பாரதி மற்றும் ஸ்ரீ கலைவாணி ஆகியோர் கலந்து கொண்டு நுரையீரல் ஆரோக்கியம், சுவாசம் தொடர்பான பரிசோதனை குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தொடர்ந்து ஒருவார காலம் இந்த பரிசோதனை முகாம் நடைபெறும் என கல்லூரியின் மக்கள்தொடர்பு அலுவலர் பிச்சமுத்து கூறினார்.

இதில் கல்லூரி பேராசிரியர்கள் விஜயகுமார், அருள், உதவி பேராசிரியர் ஹேமலதா உள்பட ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

தம்மம்பட்டியில் கார் மோதியதில் எஸ்.எஸ்.ஐ. உள்பட 2 பேர் படுகாயம்

தம்மம்பட்டி, ஆக. 24: தம்மம்பட்டியில் கார் மோதியதில் கெங்கவல்லி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் உள்பட 2 பேர் படுகாயமடைந்தனர்.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி பேரூராட்சிக்கு உள்பட்ட புதுத்தெருவைச் சேர்ந்த கெஜபதி மகன் சண்முகப் பிரியன் (47). ஜெராக்ஸ் கடை நடத்தி வருகிறார். இவர், ஞாயிற்றுக்கிழமை இரவு ஓட்டிச் சென்ற கார், பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்த கெங்கவல்லி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் (54), அவரது உறவினர் சதீஷ் (32) ஆகியோர் மீது மோதியது. தொடர்ந்து, வேகமாகச் சென்ற கார், மறுபுறம் உள்ள காய்கறிக் கடை, கைப்பேசி கடைகளின் மீது மோதியது. இதில், கடைகளின் முன்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு இருசக்கர வாகனங்கள் சேதமடைந்தன. கடைகளின் முன்புற அமைப்பும் சேதமடைந்தன.

இதுகுறித்த தகவலின்பேரில் தம்மம்பட்டி போலீஸார் விரைந்து சென்று, காயமடைந்த சிறப்பு உதவிஆய்வாளர் கோவிந்தராஜை மீட்டு அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளித்து, தீவிர சிகிச்சைக்காக ஆத்தூர் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அவரது, உறவினர் சதீஸ் ராசிபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்துகுறித்து தம்மம்பட்டி போலீஸார் காரை ஓட்டிச் சென்ற சண்முகப் பிரியன் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தம்மம்பட்டியில் இருசக்கர வாகனங்கள் நேருக்குநேர் மோதல்: ஒருவர் உயிரிழப்பு

தம்மம்பட்டி, ஆக. 24: தம்மம்பட்டியில் இருசக்கர வாகனங்கள் திங்கள் கிழமை இரவு நேருக்குநேர் மோதிக் கொண்டதில் ஒருவர் உயிரிழந்தார். 2 பேர் காயமடைந்தனர்.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி அருகே உள்ள நாகியம்பட்டியைச் சேர்ந்த செந்தில்குமார் மகன் நவநீதகுமார் (27). இவர் தனது மனைவி மஞ்சுவுடன் (27) நாகியம்பட்டியிலிருந்து இருசக்கர வாகனத்தில் தம்மம்பட்டிக்கு வந்துள்ளார். அதே வேளையில் தம்மம்பட்டியிலிருந்து டி.செந்தில்குமார் என்பவர் தனது இருசக்கர வாகனத்தில் எதிர்திசையில் சென்றுள்ளார்.

தம்மம்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி எதிரே, இரண்டு இருசக்கர வாகனங்களும் நேருக்குநேர் மோதிக்கொண்டன. இதில் சம்பவ இடத்திலேயே டி.செந்தில்குமார் உயிரிழந்தார். எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் பலத்த காயமடைந்தனர். உயிரிழந்த டி.செந்தில்குமார் மாற்றுத் திறனாளி என்பதற்கான அடையாள அட்டையை வைத்துள்ளார். மேலும், அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை.

உயிரிழந்த மாற்றுத்திறனாளி டி.செந்தில்குமார்.

விபத்து குறித்து தகவல் அறிந்த தம்மம்பட்டி போலீஸார், வழக்குப் பதிந்து உயிரிழந்த டி.செந்தில்குமாரின் உடலை கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் உணவு தயாரித்தல் பயிற்சிக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

சேலம், ஆக. 24: சேலம் நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் சமையல் கலை, உணவுத் தயாரித்தல் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வரும் 31 ஆம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாச்சியப்பா கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சேலத்தில் உள்ள நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம், தேசிய தொழிற்சார் பயிற்சிக் கழக தில்லி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற ஓராண்டு சமையல் கலை, உணவு தயாரித்தல் (பொது) பயிற்சியை மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தி வருகிறது. படிக்கும் போதே சம்பளத்துடன் கூடிய பகுதிநேர வேலை வாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. மேலும், இதர நிறுவனங்களில் படிக்க வேண்டுமெனில் அதிகமாக பயிற்சி கட்டணம் செலுத்தவேண்டி வரும்.

இப்பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு நட்சத்திர ஹோட்டல், கப்பல் நிறுவனங்கள், ரயில்வே துறை சமையலர், விமானத் துறை சமையலர், மத்திய, மாநில அரசு விடுதி சமையலர், உணவு உற்பத்தித் துறை, மருத்துவமனை சமையலர், வெளிநாடுகள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை போன்ற நிறுவனங்களில் அதிக சம்பளத்தில் உடனடி வேலைவாய்ப்பு கிடைக்கும். தற்போது 2026-27 ஆண்டுக்கான சேர்க்கை நடைபெற்று வரும் நிலையில், நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலைய 0427-2240977, 98651 12646, 76672 50378 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியார் பல்கலை.யுடன் விநாயகா மிஷன் பல்கலை. புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஓமலூர், ஆக. 24: பெரியார் பல்கலைக்கழகத்துடன் விநாயகா மிஷன் நிகர்நிலை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நிகழ்வு திங்கள்கிழமை நடைபெற்றது.

கல்விசார் சிறப்பம்சங்கள், சமூகத் தாக்கத்தை வலுப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில், வலுவான கல்வி, ஆராய்ச்சி மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்கில் பெரியார் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.ராஜ், விநாயகா மிஷன் பல்கலைக்கழகப் பதிவாளர் அ.நாகப்பன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இந்நிகழ்வில் பெரியார் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் என்.ஹேமலதா, ஆராய்ச்சித் துறைத் தலைவர் அ.முருகன், விநாயகா மிஷன் கலைக் கல்லூரி முதல்வர் வி.அன்பழகன், உதவி ஆராய்ச்சி இயக்குநர் என்.தங்கதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

ஓமலூரில் தோட்டக்கலை அலுவலர்கள் தற்செயல் விடுப்புப் போராட்டம்

ஓமலூர், ஆக. 24: தமிழக அரசின் அக்ரி 2.0 திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, சேலம் மாவட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் திங்கள்கிழமை பணிக்கு செல்லாமல் தற்செயல் விடுப்பு எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் விற்பனைத்துறை என நான்கு பிரிவுகளாக விவசாய துறைகள் இயங்கி வருகின்றன. இந்த நான்கு துறைகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் அக்ரி 2.0 திட்டத்தை செயல்படுத்த கடந்த திமுக அரசு அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆரம்பம் முதலே தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க கூட்டமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

நான்கு துறைகளும் இணைக்கப்படுவதால், பயிர் உற்பத்தித் திறன் பாதிக்கப்படும். விவசாயிகள் பெற்று வரும் மானியங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் சீராக கிடைப்பதில் முடக்கம் ஏற்படும். ஒரு துறை அலுவலருக்கு மற்ற துறைகளின் நுணுக்கங்கள், தகவல்கள் முழுமையாக தெரிய வாய்ப்பில்லை என்பதால், களப்பணியில் குளறுபடிகள் ஏற்பட்டு விவசாயிகளே அதிகம் பாதிக்கப்படுவர் என்று தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் ஓமலூர், காடையாம்பட்டி, தாரமங்கலம் ஆகிய வட்டாரங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் தற்செயல் விடுப்பு எடுத்து அலுவலகங்களை புறக்கணித்தனர். இதனால் அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. மானிய விண்ணப்பங்கள், நோய்ப் பட்ட பயிர்களைக் காக்கும் ஆலோசனைகள், திட்ட பலன்களை பெற வந்த விவசாயிகள் அதிகாரிகளைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி செவ்வாய்க்கிழமை தமிழகம் முழுவதிலும் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சென்னைக்கு சென்று அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பெருந்திரள் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்தனர்.

IDBI BANK

இடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேரேஜ், பாங்க் பாலகந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையறுதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு. இடிபிஐ வங்கி லிட்-ன் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.67,66,303/- (01.08.2026 தேதி அன்று)** தொகையை **திரு.விவேக். B மற்றும் திருமதி.B. அமுதா,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்டபாடுவைக்கப்பட்ட, **ஆக்கபூர்வ கவாதீனம் (Constructive Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **30.09.2026** தேதியில் **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.89,78,000/-** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.8,97,800/-.**

அசையாச் சொத்து விபரம்

சேலம் தாலூகா, அழகாபுரம் புதூர் எல்லைக்குள், வார்டு-C, பிளாக்-6, டவுன் சர்வே எண்.137, இதில் மறு சர்வே வார்டு-K, பிளாக்-6, டவுன் சர்வே எண்.52/15 மற்றும் வார்டு-K, பிளாக்-6, டவுன் சர்வே எண்.52/3 ல் அமைந்துள்ள, 620 சதுர நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்ட கட்டிடம் கூடிய (கட்டிடப் பரப்பு 1,480 சதுரடி) குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 20.08.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் இடிபிஐ வங்கி லிட்

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் மற்றும் வசூல் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் 612001 மற்றும் இதர இடங்களில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகங்களில் ஒன்றான **14-20/680, D கெயின் ரோடு, பஸ் ஸ்டாண்டு அருகில், இளம்பிள்ளை, சேலம் - 637502 - இளம்பிள்ளை கிளை** அலுவலக சட்டத்தின்படி அதிகாரபூர்வ அதிகாரியாக இருக்கிற படியால் மேற்படி சட்டம் பிரிவு 13 (2) & (12) , மற்றும் அதற்கு தொடர்புடைய 2002 ஆம் ஆண்டு கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதி 3-ன் கீழும் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, கடன்காரர்கள் ஆகிய **1. M / s. ஸ்ரீ ரங்கநாத சில்க்ஸ், (இதன் பிரதிநிதியாக உரிமையாளர் திருமதி.R. காயத்திரி, எண்.3/382-1, 1-வது தளம், பெருமாள் கோவில் தெரு, மேம்படிதாளம், சேலம் - 637502. 2.திருமதி.R. காயத்திரி, க/பெ.திரு.C. J. ரங்கநாதன், எண்.3/382, பெருமாள் கோவில் தெரு, மேம்படிதாளம், சேலம் - 637504. 3.திரு.C.J.ரங்கநாதன், நு/பெ.திரு.ஜெகநாதன், எண்.3/382, பெருமாள் கோவில் தெரு, மேம்படிதாளம், சேலம் - 637504 ஆகியோர்களுக்கு 11.06.2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு அனுப்பியும் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அந்த கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பாக்கி தொகையான **ரூபாய்.80,00,016/- (ரூபாய் எண்பது லட்சத்து பதினொரு மட்டும்)** மற்றும் **10.06.2026** முதல் மேற்கொண்டு மாத இறுப்புக்கான வட்டியுடன் திருப்பி செலுத்தி கடனை அடைக்குமாறு கூறியிருந்தார்கள்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சட்ட பூர்வ அறிவிப்பு கிடைக்கப் பெற்றும் மேற்படி கடன் பாக்கியை கடன்தாரர்கள் செலுத்த தவறியிட்டபடியால் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டப்பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்படி சட்டம் 8 வது விதியில் வழங்கப்பட்டுள்ள தமது அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **21.08.2026** அன்று வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி தனது கவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, குறிப்பாக மேலே கூறப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள தமாணத்தில் உள்ள அசையா சொத்துக்கள் தொடர்பாக எந்த ஒரு நபரும் எந்தவிதமான பேரேடோ, நடவடிக்கையோ வைத்துக்கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்க்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கி தொகையான **ரூபாய்.82,41,974/- (ரூபாய் எண்பத்து இரண்டு லட்சத்து நாற்பத்தொராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பி செலுத்தும் வரை **21.08.2026** முதல் மேற்கொண்டு மாத இறுப்புக்கான வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13(8) ல் உள்ள சொத்துகளை மீட்பதற்கான கால அளவு குறித்த விதிகளை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து - அட்டவணை A
சொத்து 1:திரு.C.J.ரங்கநாதன், த/பெ.ஜெகநாதன் அவர்களுக்கு சொந்தமான சொத்து

சேலம் மேற்கு பதிவகம், மகுடஞ்சாவடி சார் பதிவகம், சேலம், மேம்படிதாளம் கிராமம், S.எண்.18/2, பழைய கதவு எண்.3/382, புதிய கதவு எண்.2/270, 2/271, 2/272, 2/273, 2.50ச் (ஹெக்டேர்), வரிவிதிப்பு ரூபாய்.0.17, இதற்கு உட்பட்ட 7,200 சதுர அடி பரப்பளவு மனை, தற்போதைய சூப்பர் கட்டுமானம் மற்றும் எதிர்கால கட்டுமானம் இதனுடன் அனைத்து அடிப்படை உரிமைகள் உட்பட. **நான்கு எல்லைகள் : இடப்பக்க 1** (2,400 சதுரடி : தென்வடல் பஞ்சாயத்து ரோட்டிற்கு **கிழக்கு,** ஜந்திராணி வீட்டிற்கு **மேற்கு,** மாணிக்கம் வீட்டிற்கு **வடக்கு,** 20 அடி அகல தென்வடல் பொது தெருவிற்கு **தெற்கு. அளவீடு :** கீழ் மேல் வடபறம் 60 அடி, தென்புறம் 60 அடி, தென்வடல் கீழ்புறம் 40 அடி, மேல்புறம் 40 அடி. **இடப்பக் 2** (2,400 சதுரடி : இடப்பக் 1 சொத்திற்கு **கிழக்கு,** 20 அடி அகல தென்வடல் ரோட்டிற்கு **மேற்கு,** நடராஜன் நிவாத்திற்கு **வடக்கு,** 20 அடி அகல கீழ்மேல் ரோட்டிற்கு **தெற்கு. அளவீடு :** கீழ்மேல் வடபறம் 60 அடி, தென்புறம் 60 அடி, தென்வடல் கீழ்புறம் 40 அடி, மேல்புறம் 40 அடி. **இடப்பக் 3** (2,400 சதுரடி : நடராஜ் மற்றும் N. மாணிக்கம் சொத்திற்கு **கிழக்கு,** தென்வடல் தெருவிற்கு **மேற்கு,** கீழ் மேல் தெருவிற்கு **வடக்கு,** இடப்பக் 2 சொத்திற்கு **தெற்கு. அளவீடு :** கீழ்மேல் வடபறம் 60 அடி, தென்புறம் 60 அடி, தென்வடல் கீழ்புறம் 40 அடி, மேல்புறம் 40 அடி.

இடம் : சேலம், தேதி : 21.08.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN : L65110TN1904PLC001287,
போன்: 0435 - 2402322, க.பேக்ஸ் : 0435 - 2431746, இணையதளம் : www.cityunionbank.com

இந்தியன் வங்கி — இலாஹாபாத் அலகாபாத்

குமாரபாளையம் கிளை
62-63, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம், நாமக்கல் - 638183

அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் மற்றும் செக்யூரிட்டி இன்டரஸ்ட் அமலாக்க விதிகள் 2002-ன் கீழ் விதி 8(6) & 9 (1)-ன் படி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக கொடுக்கப்படும் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன்மூலமாக பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன் பெற்றவர் (கள்) மற்றும் உத்திரவாதம் அளித்தவர் (கள்) ஆகியோருக்கு தெரிவிப்பது யாதெனில், செக்யூரிடு கிரெடிட்டார்-ஆன **இந்தியன் வங்கி, குமாரபாளையம் கிளை** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்ட, இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ளதும் மற்றும் செக்யூரிடு கிரெடிட்டார் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதுமான அசையாச் சொத்து ஆனது **(1) M/s.ARR டெக்ஸ்,** 3-F-2, அம்மன் நகர், குமாரபாளையம் - 638183, **(2) திரு.A.R.மோகன் (பங்குதாரர்),** 6/58, பெரியாண்டிபாளையம், மகுடஞ்சாவடி, சேலம் - 637103. **(3) திரு.K. வீரப்பன் (பங்குதாரர்),** 92, பெரியாண்டிபாளையம், மகுடஞ்சாவடி, சேலம் - 637103. **(4) திருமதி.M.சுமதி (உத்தரவாதம் அளித்தவர்), க/பெ.A.R.மோகன்,** 6/58, பெரியாண்டிபாளையம், மகுடஞ்சாவடி, சேலம் - 637103. **(5). திருமதி.V.மணிமேகலை (உத்தரவாதம் அளித்தவர்). க/பெ.K.வீரப்பன்,** 92, பெரியாண்டிபாளையம், மகுடஞ்சாவடி, சேலம் - 637103, வசம் இருந்து செக்யூரிடு கிரெடிட்டார்-ஆன **இந்தியன் வங்கி, குமாரபாளையம் கிளைக்கு** வரவேண்டிய நிலுவைத் தொகை **20.08.2026 வரையில் ரூ.1,89,23,445/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஒன்பது லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)** மற்றும் உண்டாகும் வட்டி, கட்டணங்கள், பிற செலவுகள் உள்படவசூலிக்கும் பொருட்டு **'எப்படி எங்கு என்ன நிலையில் உள்ளனவோ அதே நிலையில்' 25.09.2026** அன்று விற்பனை செய்யப்படும்.

மின்னணு ஏல முறையில் விற்பனைக்கு கொண்டுவரப்பட உள்ள சொத்தின் விபரம் இதன்கீழ் விவரிக்கப்படுகிறது. அசையாச் சொத்தின் விபரம் : சொத்து 1: திருமதி.M.சுமதி, க/பெ.A.R.மோகன் அவர்களின் பெயரில் உள்ள ஈரூகாட்டப்பட்டுள்ள சொத்து. சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் , சங்ககிரி தாலுகா, கூடலூர் கிராமம், S.F.No.97/6, புஞ்சை ஏக்கர் 1.55, மறு-உட்பிரிவு SF No.97/6A-1. இதில் கூடலூர் பஞ்சாயத்தால் எண். Ref.No.M.M.19/2000-2001 நாள் 27.03.2001-ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 1.45 ஏக்